# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032

தொலைபேசி: 044–22201337

மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032

முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),

*************

முறையீட்டு மனு எண்: 0093/2017/ந

ஆணை எண்: 182/2017

நாள்: 10/07/2017

திரு. டி. கே. சாரங்கபாணி,
எண்.3, கமலா தெரு,
நேரு நகர், குரோம்பேட்டை,
சென்னை – 600 044.

– முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
அரக்கோணம் நகராட்சி,
மற்றும் பிறர்.

– எதிர் மனுதாரர்கள்

## ஆணை

முறையீட்டு மனுதாரர் திரு. டி. கே. சாரங்கபாணி என்பவரது முறையீட்டு மனு 27.04.2017 அன்று வரப்பெற்று எண்.0093/17 ஆக பதிவு செய்யப்பட்டது. மேற்படி முறையீட்டு மனுவில் மனுதாரர் அரக்கோணம் நகராட்சியில் கணக்கராக பணியாற்றி 01.03.2001ல் சுயவிருப்பு ஓய்வு பெற்றதாகவும் சுமார் 16 ஆண்டுகள் கடந்தும், பல விண்ணப்பங்கள் அனுப்பியும் தனக்கு சேரவேண்டிய கீழ்காணும் தொகைகள் அரக்கோணம் நகராட்சி ஆணையரால் வழங்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ.எண். | வழங்கப்பட வேண்டியதாக குறிப்பிட்டுள்ள தொகை விவரம் |
|---|---|
| (i) | 1.10.1998 முதல் 28.2.2001 வரை வழங்கப்பட வேண்டிய ஊதிய உயர்வு தொகை |
| (ii) | ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட திருமண முன்பண நிலுவைத் தொகை |
| (iii) | ஈட்டிய விடுப்பு சரி செய்து 40 நாட்களுக்கான ஊதியம் |
| (iv) | நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.340 நாள்:08.8.2008ன் படி வித்தியாசப்படும் சிறப்பு சேமநலத் தொகை ரூ.5,000/- |

மேற்படி கோரிக்கை நிர்வாகம்/பணியமைப்பு தொடர்பானதாக இருப்பினும் 2014-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்ட பிரிவு 2 (8)ன் கீழ் வரையறுக்கப்பட்டவாறான நிர்வாக சீர்கேடு அல்லது அசாதாரண காலதாமதம் அமைந்துள்ளதா என்பது குறித்து பரிசீலிக்கும் பொருட்டு, முறையீட்டு மனுதாரரது கோரிக்கைகள்/புகார்கள் குறித்து பதிலறிக்கையினை தாக்கல் செய்யுமாறு இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை எண்.0093/2017/ந நாள்:02.05.2017ன் மூலம் அரக்கோணம் நகராட்சி ஆணையருக்கு ஆணையிடப்பட்டது.

மேலும், 29.06.2017 அன்று இம்முறைமன்ற நடுவ விசாரணைக்கு ஆஜராகி விளக்கம் அளிக்குமாறு மனுதாரர் மற்றும் அரக்கோணம் நகராட்சி ஆணையர் ஆகிய இருவருக்கும் தனித்தனியே இம்முறைமன்ற நடுவ அழைப்பாணைகள் (முறையீட்டு மனு எண்.0093/2017/ந நாள்:23.05.2017) அனுப்பி வைக்கப்பட்டன. இதனிடையே நகராட்சி ஆணையரது பதிலறிக்கை ந.க.எண்.95/2016/சி1 நாள்:6.6.2017, இம்முறைமன்ற நடுவத்திற்கு 13.06.2017 அன்று வரப்பெற்றது. மேற்படி அறிக்கையில் திருமண முன்பணம் பிடித்தங்கள் தொடர்பான கூடுதல் விவரங்கள் கோரப்பட்டுள்ளதாகவும் நிலுவை ஊதியம் நிறுத்தி வைக்கப்பட்டதற்கான விவரங்கள் இல்லை என்றும் விவரங்கள் அளிக்கும் பட்சத்தில் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் ரூ.5000/- வழங்கவும், சேமநல நிதித் தொகைக்கான வட்டித்தொகை பொது நிதியிலிருந்து வழங்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

06.06.2017 அன்று விசாரணைக்கு ஆஜரான அரக்கோணம் நகராட்சி ஆணையரிடம் அறிக்கையில் அளிக்கப்பட்டுள்ள பதில்கள் ஏற்புடையனவாக இல்லை என முறைமன்ற நடுவத்தால் சுட்டிக்காட்டப்பட்டது. அவ்வமயம் அறிவுரைகளின்படி மனுதாரரிடம் கலந்து பேசி தேவைப்படும்

விவரங்கள்/ஆவணங்களைப் பெற்று விதிமுறைகளின்படி உரிய தீர்வுகளை வழங்கிட நடவடிக்கைகளை மேற்கொண்டு மனுதாரரது குறைகளை களைய நடவடிக்கைகளை மேற்கொள்வதாக அரக்கோணம் நகராட்சி ஆணையரால் உறுதி அளிக்கப்பட்டது.

இம்முறைமன்ற நடுவ ஆணைகளின்படி இரு தரப்பினரும் கலந்து பேசி முறையீட்டு மனுதாரருக்கு சேர வேண்டிய சேம நல நிதி வட்டித் தொகை ரூ.12,429/-க்கான காசோலை முறையீட்டு மனுதாரரிடம் வழங்கப்பட்டது. மேலும், பிற இனங்கள் தொடர்பான விவரங்கள் மனுதாரரால், நகராட்சி ஆணையரிடம் வழங்கப்பட்டது. மேலும், இது தொடர்பாக மனுதாரர் 01.07.2017 நாளிட்ட தனது கடிதத்தினை அரக்கோணம் நகராட்சி ஆணையருக்கு அனுப்பி வைத்து அதன் நகலினை இம்முறைமன்ற நடுவத்திற்கும் அனுப்பி வைத்துள்ளார்.

இந்நிலையில் மனுதாரரது கோரிக்கைகளை தார்மீக அடிப்படையிலும், சட்ட விதிகளின்படி பரிசீலித்தும் உரிய தீர்வுகளை வழங்கிட வேண்டுமென அரக்கோணம் நகராட்சி ஆணையருக்கு ஆணையிடப்படுகிறது.

2017-ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 3-ஆம் நாள் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

12-7-17

பெறுநர்

1) திரு. டி. கே. சாரங்கபாணி,
எண்.3, கமலா தெரு,
நேரு நகர், குரோம்பேட்டை,
சென்னை – 600 044.

2) நகராட்சி ஆணையர்,
அரக்கோணம் நகராட்சி,
வேலூர் மாவட்டம்.